குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.61/2017

அ.சா.6

2026–ம் ஆண்டு பிப்ரவரி 26–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரசு | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னன்னன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.02 மணி,

Accused A1)Vijayavarman, A2)Jayakumar present. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது ஓமலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2016–ம் தேதி உதவி ஆய்வாளராக பணியில் இருந்த லதா என்பவரது கையெழுத்து ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு நன்கு தெரியும். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு, ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 05.03.2016 ஆம் தேதி, உதவி ஆய்வாளர் லதா என்பவர் நிலையத்தில் இருந்தபோது காலை 11.00 மணியளவில் அதற்கு முன்னதாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகலின் பேரில் சிறப்பு உதவி ஆய்வாளர் பாலு என்பவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சாட்சி பன்னீர்செல்வம் என்பவரை விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து, ஆஜர் செய்த புகார் வாக்குமூலத்தின் நிலைய குற்ற எண்.164/2016 சட்டபிரிவுகள் 294(பி), 427, 323, 506(1) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.26 17:33:18 +0530

3. பின்பு வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலைவாணி மற்றும் ஜெயா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. சாட்சிகள் 1 முதல் 7 வரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு, அன்றைய தினமே எதிரி தங்கவேல் என்பவரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். எதிரிகள் விஜயவர்மன் மற்றும் ஜெயக்குமார் ஆகிய இருவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் கைது செய்யப்படவில்லை.

5. பின்பு, சம்பவத்தில் காயமடைந்த சாட்சி பன்னீர்செல்வம் மற்றும் மீனா ஆகியோர்களுக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து, சிகிச்சையளித்த ஓமலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் ராஜேந்திரன் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். ( **அந்த பன்னீர் செல்வம் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும், அந்த மீனா என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது**.)

5. பின்பு சிறப்பு உதவி ஆய்வாளர் பாலு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு, வழக்கில் புலன் விசாரணை முடித்து சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளின் மீது நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

6. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி நான் இல்லை. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.02.26 17:33:21 +0530

அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.11 மணி.**

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.02.26 17:33:24 +0530